
Koviloor Digital Library

# சிவசின்னங்க ளணிவதேன்?

Acc. No.
1519 - 10

The Progressive Printers,
17, Coral Merchant St.,
Madras.

Koviloor Digital Library



Koviloor Digital Library

உ
திருச்சிற்றம்பலம்

# * சிவசின்னங்க ளணிவதேன்?

" குறிகளும், அடையாளமும், கோயிலும்,
நெறிகளும், அவர் நின்றதோர் நேர்மையும்,
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்,
பொறியிலீர்! மனம் என்கொல் புகாததே?"

திருநாவுக்கரசர்.

சிவசின்னங்களை அணிதல் சமய வாழ்க்கைக்கு அவசியமாதலை அறியாது, இந்நாளில் நம்மவரிற் பலர் அவற்றினிடத்து அருவையும் அசட்டையும் காட்டி வருகின்றனர். இந்துக்களின் ஜனத்தொகையும், அவர் தம் சமய ஒழுக்கமும் குன்றிவருமிந்நாளில், எவர்களும் கவனிக்கத் தக்க நியாயங்கள் சிலவற்றைக் காட்டுதலே இந்தக் கட்டுரையின் கருத்து. இங்கு, சிவ சின்னங்கள் என்று குறிக்கப்படுவன விபூதியும் உருத்திராக்கமுமாம். இப்பேருக்கு, " மங்களத்தைத் தரும் அடையாளங்கள் ' 'மங்களமாகிய அடையாளங்கள் ' ' சிவனை அடைதற்குரிய அடையாளங்கள் ' ' சிவனணியும் அடையாளங்கள் ' என்றெல்லாம் பொருள் விரிக்கலாகும். இச்சின்னங்களை நாமணிய வேண்

---

* இவ்வியாசத்தில் வரும் வடமொழி மேற்கோள்கள், பல ஆன்றோர்கள் தமிழிலெழுதிய சமய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டப்படுபவை.

Koviloor Digital Library ?

டியதற்குப் பலசிறப்பட்ட காரணங்கள் உள. அவற்றிற் சிறந்தவை சில இனிக் காட்டப்படும்.

(1) ஒரு நாட்டினர் தொன்று தொட்டே ஒரு ஆசாரத்தைக் கைக்கொண்டு வந்திருப்பாராயின், அது தீயதென்றுவது பயனற்றதென்றுவது மெய்ப்பிக்கப் பட்டாலன்றி, அதைக் கைவிடுதல் நீதமன்று. பிற நாட்டறிஞரும் அவ்வாறு செய்தலை மெச்சுவதாக அறிகிலம். இந்நாட்டில் விபூதி உருத்திராக்க தாரணம் எக்காலத்தில் ஏற்பட்டதென்று கணிக்க முடியாத பண்டை வழக்கமாயிருந்து வருகிறது. அதை மேற்கொண்டொழுகுவோர் சாமானிய மக்கள் மட்டுமல்லர். வைதிக சம்பந்தமுள்ள சான்றோரனைவருமே யாவர். சைவர்களும் சுமார்த்தர்களும் இன்றுவரை விபூதி உருத்திராக்க தாரணமுடையராயிருத்தல் வெளிப்படை. சில நூற்றுண்டுகட்கு முன்வரையில், வைணவ சோதரர்கட்கும் இத்தாரணமே இருந்து வந்ததென்பது சமய சாத்திர வல்லோர் பலரது துணிபு. "மாதவாசாரியரும் சூதசங்கிதையின் தீபிகை என்ற வியாக்கியானத்தில், பஸ்மருத்ராக்ஷதாரணமானது தமக்குஞ் சம்மதமென்று காண்பித்திருக்கிறுர்." 1 வேதத்திலுள்ள இந்நீறு, 'வானவர் மேலது' 'முனிவ ரணிவது' 'தக்கோர் புகழ்வது' தலைவனே அணிவது. இத்துணைப் பழமையான இந்த சிஷ்டாசாரமானது, மேல்நாட்டு நாகரீக வெள்ளத்தாற்றுனும் முற்றும் அடித்துக்கொண்டு போய் விடப்படவில்லை; இமசேது பரியந்தம் பலகோடி மக்களிடம் இன்றளவும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இத்

---

1 ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர்.

Koviloor Digital Library

தகைய ஆசாரம் தீயதென்றுவது, பயனற்றதென்றுவது இன்னும் எவராலும் மெய்ப்பிக்கப்படவில்லை. மெய்ப்பிக்க ஒருநாளும் முடியாதென்றும் பின்னர்க் காட்டப்படும். ஆதலால், விபூதி உருத்திராக்க தாரணம் விதிக்கப்பட்டுள்ள சமயத்தைச் சார்ந்த ஒவ்வொரு இந்துவும், தன்மதிப்புடையனாயின், தான் எந்நிலையில் நின்றாலும் இத்தாரணத்தை நம் நாட்டுத் தீதிலாப் பண்டை ஆசாரம் என்னும் ஒரு காரணங்கொண்டே மேற்கொள்ளும் கடப்பாடுடையனாவன்.

(2) அன்றியும் சிவசின்னங்களை அணியுமாறு வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், மிருதி, சூத்திரம், தோத்திரம் முதலிய சமய சாத்திரங்கள் யாவும் மிகப் பெரிதும் வற்புறுத்துகின்றன. சமயநூல்வல்ல சான்றோர் சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலிருந்து செய்துள்ள அரிய ஆராய்ச்சிகளால் வைதிக சமயநூல்கள் விபூதி உருத்திராக்க தாரணத்தை விதித்துப்பாராட்டுவதுபோல் வேறெந்த சின்னத்தையும் விதித்துப் பாராட்டவில்லை என்றும் புலப்படுகின்றது. வைதிக கிரியைகள் செய்தற்கும் ஞானோபதேசம் பெறுதற்கும் ஈசுவர பூசை இயற்றுதற்கும் விபூதி உருத்திராக்கதாரணம் இன்றியமையாததென்று அந்நூல்கள் உறுதி கூறுகின்றன. அன்றியும், சமய சின்னங்களின்றி எந்த பெரிய சமயமும் உலகில்பலர்க்குப் பயன் தருவதாய் நிலவ முடியாதென்பதும் மறுக்கவொண்ணா உண்மை. ஆதலால், நஞ்சமய நூல்களில சிறிது பற்றுடையோரும், அவை சிறப்பித்து விதிக்கும் தீதிலா இச்சின்னங்களைப் புறக்கணியாது கைக்கொள்ள வேண்டியவராகின்றனர்.

(3) இச்சின்னங்களை அணிதலால் இம்மையே உட-

Koviloor Digital Library


னுக்காய நலங்களும் பல கிடைக்கும் என்று சுருதி கூறு கின்றது. "ருத்திராக்கினியின் மேலுள்ள வீரியம் பஸ்மம் எனப்படும். ஆதலின், எக்காலமும் விபூதி தரித்தவன் வீரியவான்." "பஸ்மம் அக்கினி சம்பந்த முற்றிருத்தலால் பஸ்மஙிஷ்டனுடைய தோஷங்கள் ஒழிகின்றன." "பஸ்மத்திலே ஸ்நானஞ்செய்த தூயோன் பஸ்மநிஷ்டன் எனப்படுகிறான் 1" திருநீறு, 'சுந்தரமாவது' 'கானமினியது' 'கவினைத் தருவது' 'பூசவினியது' 'உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது.' உருத்திராக்கமும் அவ்வாறே. மருத்துவ குணமும் இவ்விரண்டிற்கும் உண்டென்ப. 2 ஆதலாலும் இவ்வாசாரம் கைவிடற்பாலதன்று.

(4) இவ்விம்மைப்பயன்களேயன்றி, சர்வ பாப நாசமும் சர்வ மங்களப் பிராப்தியும் இச்சின்னதாரணத்தால் கிடைக்கும் என்று உபநிடதாதி உயரிய நூல்கள் தற்கால அறிவு திகைத்து ஐயப்படும் வண்ணம் விரிவாய்ப் பேசுகின்றன. அவ்வாற்றாற் பலன் பெற்றார் சரிதங்கள் பலவும் சாற்றுகின்றன.3 இத்தகைய பலன்கூறும் ஆப்த மொழிகளைக் கொள்ளுமாறு கொள்ளமாட்டாதார், இவற்றில் ஐயமுற்று ஒருபுடை ஒதுக்கினும் ஒதுக்குக. இவர்களும் மற்றெவர்களும் கூர்ந்து கவனித்தற்குரிய குறிப்புகள் இச்சின்னங்களில் உள என்பதுமட்டும் உணரப்படின், அவ்வுண்மையொன்றே கருதி நவீன மதியினரும் அவற்றை நாடியணிதல் கூடும். ஆகவே, விபூதி உருத்திராக்கங்கள்

---

1 பிருஹஜ்ஜாபாலம்.

2 ஸ்ரீ தடிசைக்கிழார். அ. சிதம்பரனார் எழுதிய 'உருத்திராக்க விளக்கம்' காண்க.

3 உதாரணம்: ஜாபால உபநிடதம், ஸ்காந்த புராணம்.

Koviloor Digital Library


'குறிகளும் அடையாளமு'மாய்க் கொளப்படுந் தன்மையை இனி விளக்கத் தொடங்குவோம்.

விபூதி

முதலில் விபூதிதாரணக் கருத்தை விளக்கலாம். பிறவி நோயைத் தீர்க்கும் மணிமந்திர ஔடதங்களில் விபூதியே ஔடதமாகுமென்ப. "ஐசுவரியத்தைக் கொடுக்குங் காரணத்தினால் பூதி எனவும், சமஸ்தபாவங்களையும் போக்குதலால் பஸ்மம் எனவும், பிரகாசித்தலால் பசிதம் எனவும் ஆபத்தைப்போக்குதலால் க்ஷாரம் எனவும், பூதப்பிரேத பிசாச பிரஹ்மராக்ஷஸ அபஸ்மார பவபீதிகளினின்று காத்தலால் ரக்ஷை எனவும், விபூதிக்குத் திருநாமங்கள் போந்தன." 1 (விபூதி-மேலான ஐசுவரியம்). இதற்குத் தமிழ்த் திவாகர நிகண்டுகளில் காணப்படும் மற்ற பெயர்கள், திருநீறு, காப்பு, பொடி, பற்பம், ஹோமப்பொடி., புண்ணிய சாந்தம், வெண்டாது என்பனவாம். ஆயினும், விபூதி திருநீறு, என்னும் இரண்டு பெயர்களே தமிழுலகில் பெரிதும் வழங்குவன.

இவ்விபூதியை அணியுமாறு ஆரிய வேதம் எவ்வளவு வற்புறுத்துகின்றதென்பதை உணர்ந்த இரண்டு பிரமாணங்கள் சாலும்: (i) "சத்தியம், தருமம், நன்மை, பூதி இவைகளிலிருந்து தவறாதே" 2 (ii) "பஸ்மமில்லாத நெற்றியைச் சுடு". 3 இவைபோன்ற சுருதி வசனங்கள்

---

1 பிருஹத் ஜாபாலம்.—'தேவார வேதசார'த்தில் பிரமாணிக்கப் பட்டது.

2 தைத்திரி யோபநிடதம்.

3 பிருஹஜ்ஜாபாலோபநிடதம்.

Koviloor Digital Library


பலவுள. இவற்றைப் பின்பற்றி முழங்கும் மற்றை நூல் களின் வாக்கியங்கள் எண்ணில. விபூதியின் வகைகளையும், உண்டாகும் விதங்களையும், தரிக்கும் விதிகளையும் வேதங் களும் ஆகமங்களும் விரிவாய்க் கூறுகின்றன. சுருங்கச் சொல்லின், ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப்பதிகத் தமிழ் மறையில் கட்டுரைத்த வெல்லாம் ஆரியமறையும் அறைவனவே என்னலாம்.

ஆனால் இங்கு விளக்கப் புகுவது சிவசின்னங்கள் குறி களாந்தன்மையையே யாதலால் அவற்றின் ஏனைய பல சிறப்புகளை விளக்க இடனின்று. ஆதலின், மகாபாரத அநு சாசநிகபருவத்தில் வரும் வசனமொன்றைத் துணைக் கொண்டு மேற்செல்லுவோம். அது, "உமையே! ரக்ஷ ணத்துக்காகவும், மங்களத்துக்காகவும், சுத்தத்துக்காகவும், அடையாளத்துக்காகவும், பக்தர்களுக்கு நான் பஸ்மத்தை முன்காலத்தில் கொடுத்தேன்" 1 எனவுள்ளது. மந்திர மாவதும், முத்திதருவதும், சுத்தமதாவதுமாயுள்ள திரு நீறும் கண்டிகையும் அடியார்கட்கு அடையாளமென்று பண்டைப் பிரமாண நூல்களாலும் ஸ்ரீ திருமூலயோகிகள் ஸ்ரீ சங்கராசாரியர் முதலிய ஆன்றோராலும் நன்கு கூறப் பட்டுள்ளது. எவ்வாறு விபூதி அடையாளமாகின்றது?

சுவாநுபூதிச் செல்வராகிய ஸ்ரீ சுந்தரசுவாமிகள், சாதனமாக வேதத்திற் கூறப்பட்ட விபூதியைப்பற்றிப் பின்வருவாறு எழுதியுள்ளார்:—

'ஒருவன், குண்ட மண்டபாதிகளை அமைத்து, அக்

1 'விபூதி ருத்ராக்ஷதாரண நிரூபணத்'தில் பிரமாணிக்கப்பட்டது.

Koviloor Digital Library



கினியை வளர்த்து, அதில் பரமசிவத்தை மந்திராதிகளினால் பாவித்து, தத்துவ ஓமங்கள் பண்ணி, கோமய பிண்டங்களைச் சிவ பிண்டங்களாக மந்திராதிகளாற் பாவித்து, ஓமஞ்செய்ய, அச்சிவ பிண்டத்திற்கும் முன் அக்கினியில் பாவித்த பரமசிவத்திற்கும் மந்திர விசேடத்தால் ஏற்படும் ஐக்கியத்தைப் பரம குருமுகமாக விசாரித்து, அவ் விபூதியைப் பரமசிவத்துக்கு வேறில்லாததாக எண்ணி, உத்தூளன திரிபுண்டரங்களாகத் தரித்திட, சகல பாவங்களும் நீங்கி, மேலான விபூதியின் பொருளை யடையத்தகும் சித்த சுத்தி யுடையவனாய்ப் பவிப்பான்.' 1

திருநீறு விளக்கும் விதத்தை உற்றுப் பார்க்கில், பெரிதும் வியக்கத்தக்க உண்மைகள் சில புலனாகும்: பசுவின் மலமாகிய சாணத்தை மந்திர பூர்வமாக ஏற்று உலர்த்தி நெருப்பிலிட்டு நீற்ற, உயர்வகைத் திருநீறுண்டாகின்றது. பசு என்னும் பெயர் ஆன்மாவையும், மலம் என்னும் பெயர் அதை அநாதியே பந்தித்துள்ள ஆணவ கன்மம் மாயை என்னும் மும்மலத்தையும் குறிப்பது எவர்க்குந் தெரிந்ததே. இனி, ஆன்மாவின் மலமானது ஞானாசாரியன் அருளும் ஞான நெருப்பினால் வலியிழந்தொழியும் என்பதும், ஒழியவே ஆன்மா சுத்தமடைந்து சிவகுணம் பதியப்பெற்று ஆனந்த மயமாய்ப் பிரகாசிக்கும் என்பதும் சிவஞான சாத்திரங்களில் செம்மையாய் விளக்கப்படும். விபூதி தாரணமுக்குறிகள் மும்மலநாசங்குறிக்கும் என்னலாம். 1 வெண்மை

---

1 சுவாநுபவ ரசமஞ்சரி.

1 அவை பிரணவத்தின் மூவெழுத்து, மூவுலகு, முச்சத்தி, மூவ்வேதம், மூவ்வக்கினி முதலிய திரிபுடிகளைக்குறிக்கும் என்று உபநிடதம் கூறும்.

Koviloor Digital Library


சுத்தத்திற் சுறிகுறி என்பதும் வெளிப்படையே. இவ்வாறு, மூவகைத் துரிசுடனிருந்த ஆன்மா துரிசற்றுச் சுத்த சிவத்தோடு அத்துவிதமாய்க் கலக்கும் அருநெறியையன்றோ திரிபுண்டர விபூதிதாரணம் குறிக்கின்றது. ஒரு சமய சின்னம் சுட்டக்கூடிய குறிக்கோள் இதனிலும் சிறந்த தொன்றுண்டோ? மற்றுஞ் சில உண்மைகளும் இச் சின்னத்தின் மூலமாய் நினைப்பூட்டப் படுகின்றன. அவை யாவன:

(i) உலகவாழ்க்கை அநித்தியம் என்பது. நாடோறும் "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்முடிவிலொரு பிடிசாம்ப ராய் வெந்து" போவதைக் காண்கிறோம். சர்வசங்கார காலத்தில் எல்லாப் பிரபஞ்சங்களும் நீற்றின் மயமே அடைகின்றன.

(ii) இத்தகைய நீறானது எல்லாவற்றின் வீரியமாகும். 'எரிபோல்மேனிப்பிரானும்' 'மெய்யெலாம்வெண்ணீறு சண்ணித்த மேனியனும்' ஆகிய பரமசிவனது சொரூப அறிகுறியும் அதுவே.
'பராவணமாவது'ம் நீறே. அஃது எக்காலமும் அழியாதது.

(iii) பசுவின் மலம்நீறிய பின்னரே,—பிரபஞ்சப் பற்றைவிட்ட பின்னரே,—சிவன் சிவனாவன்.

இவ்வாறு விபூதி தாரணமானது, உத்தமமான குறிக்கோளையும், உயரிய கருத்துக்களையும் நினைப்பூட்டும் உலகறிந்த சமய சின்னமாய்க் கொள்ளுமாறு அமைந்துள்ளது. ஆதலால், திருநீற்றைக் காணுந்தோறும் உடம்பில் அணி

Koviloor Digital Library


யுந்தோறும் அது சுட்டும் பொருளையும் உள்ளுற நினைப்பவர்கள் மேன்மேலுந் தூய்மையுடையராய்ச் சமயநெறியில் மேம்படுவர் என்பது திண்ணம்.

இவ்வளவு கருத்துக்களையும் தற்கால குயுக்தியால் கற்பித்து விட்டோமில்லை. யுத்தியே என்று ஒருவர் சாதிக்கினும் அது சாத்திர சம்மதம் பெற்ற யுத்தியே யாதலின் தழுவத்தக்கதே என்க. உண்மைப் பெரியோர்க்கும் இஃது ஒப்ப முடிந்ததே என்றுங் காட்டுவோம். திருநீறு பரிசுத்தத்திற் கடையாளமென்பது,

" தூயவன், தூய வெண்ணீறு மேனிமேல்
பாயவன்.............................." (1)

" தூயவன் காண், நீறு துதைந்தமேனித்
துளங்கும் பளிங்கனைய சோதியான் காண்" (2)

என்னுந் தமிழ்மறை உரைகளில், இறைவனின் தூய தன்மை கூறிய வுடனே திருநீற்றின் உத்தூளனங் குறிக்கப்பட்டிருப்பதால் உய்த்துணரக் கிடக்கின்றது.

" மாசிலாதமணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"

என்னும் பெரிய புராணத் திருவாக்கும் இதனை ஆதரிக்கும்.

புறந்தூய்மை நீரானும், நீறானும் அமையும். அது வாய்மையால் வரும் அகந்தூய்மை யுள்வழி சிறக்கும்.

திருநீறணிவதன் குறிப்பென மேலே விளக்கிய கருத்தை மெய்ஞ்ஞானியாகிய ஸ்ரீ சிதம்பர சுவாமிகள்,

---

1- சம்பந்தர். 2. அப்பர்.

Koviloor Digital Library



"ஆதிபகவன் ஞானவடி வழலிற் பூத்து, சித்தியமாய், [ய்,
அணிந்தோர் தமக்கு வசிகரமாய், அருந்திறேனோர்கட்காரமுதா
நீதியறியும் பசுமலத்தை நீக்குமொருநந் குறிகாட்டி,
சிகழ்பேரின்பக் கடலூட்டி நின்ற புகழ் வெண்டிருநீறே"*

என்று அருளிச் செய்துள்ள அடிகளில் இனிது காணலாம். முன்னர்க் குறித்த ஸ்ரீ சுந்தரசுவாமிகளும் இதனையே மிக விரிவாக ஒரு பிரகரணத்தில் விளக்கி, "ஜகத்துக்கு அழியுந்தன்மை என்ன, வஸ்துவுக்கு அழியாத்தன்மை என்ன, சுத்தத்தன்மை என்ன, பசுவின் மலந் தகிக்கப்பட்டுச் சித்தித்திடுதலென்ன, இவ்வளவும் விபூதியைக் கையி லெடுத்த மாத்திரத்தில் விவேகிகளுக்குத் தெரிய வரலாம். ஆகையால் அதற்கு அவ்வளவு மகிமை கூறியது" என்று முடிக்கின்றார்கள்.† "பேணிபணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு"‡ என்னுந் திருவாக்கு முக்காலும் மெய்ம்மையே.

## II

இரண்டாவது, உருத்திராக்கத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்; "உருத்திருடைய கண்ணினின்று பிறந்தவை உருத்திராக்ஷம் என உலகத்திற் கூறப்படுகின்றன."* ருத்திரன் + அக்ஷம் என்னு மிரண்டு சொற்களாலாகிய இப்பேருக்கு வடநூல் வல்லார்† கூறும் பொருள் பின்வருமாறு: "(ருக்கை) சம்சார துக்கத்தை (திரவிப்பதால்)

---

* திருப்போரூர் சந்நிதிமுறை: காப்புப்பருவம்.
† சுவாநுபவ ரசமஞ்சரி.
‡ சம்பந்தர்.
* ஜாபால உபநிடதம் ('தேவார வேதசாரத்'தில் காண்க.)
† கோடகநல்லூர்—ஸ்ரீ சுந்தரசுவாமிகள்.

Koviloor Digital Library



நீக்குவிப்பதால் (ருத்திரம்) அதுவாயுள்ள (அக்ஷம்) கண், என்னப்படும்'' உருத்திராக்ஷமாலைக்கு, அக்ஷமாலை (அக்குமாலை), கண்டிகை (கண்டி), தாழ்வடம் முதலிய பெயர்கள் தமிழ் நூல்களில் வழங்குகின்றன. இஃதும் வேதம் முதலிய பிரமாண நூல்களால் விபூதியோடு சேர்த்து வற்புறுத்தி விதிக்கப்பட்டதொரு சின்னமே. விபூதியைப் போலவே இஃதும் ஆன்றோ ரநுஷ்டானத்திலும் இருந்து வருகின்றது. சிவபெருமானே "கண்டியிற்பட்ட கழுத்துடையோன்'' என்று தமிழ் மறையில் பேசப்பட்டுள்ளான். விபூதியணிதற்குக் கூறிய நியாயங்கள் யாவும் இதற்கும் பொருந்தும். இங்கு விளக்க விரும்புவது இதனை ஒரு சமயக்குறியாக, அடையாளமாக, கொள்ளுமிடத்து, அது காட்டும் கருத்தையே.

இஃது உருத்திராக்க வரலாற்றைக் கவனிக்க வெளியாகும். இவ்வரலாறு முதன் முதல் பூசுண்ட முனிவருக்குக் காலாக்கினி ருத்திர பகவானால் உபதேசிக்கப்பட்டதென்று உபநிடதம் உரைக்கும். இதன் சாரமாவது, திரிபுரசங்காரத்திற்காகச் சிவபெருமான் தனது திருக்கண்களை மூட, அவைகளிலிருந்து வெளிப்பட்டுப் பூமியில் விழுந்த நீர்த்துளிகள், யாவர்க்கும் அருள்புரிய வேண்டும் என்று கருதிய இறைவன் சங்கற்பத்தின்படி, தாவரமாகுந் தன்மையடைந்து உருத்திராக்க மரங்களாயின என்பதாம்.

இச் சரிதத்திலிருந்து இரண்டு உண்மைகளைப் பெரியோர் நமக்குணர்த்துகின்றனர். அவையாவன:—

(1) முப்புரங்களை எரிக்கும்பொருட்டு முதல்வன்

Koviloor Digital Library



உருவத் திருமேனியோடிருந்து ஞானக்கினி சுபாவமான தனது திருநேத்திரங்களை இயக்கினன் என்பதால், ஆண்டவன் ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்பத் திருமேனி தாங்கிவந்து அவற்றின் மும்மல காரியங்களைத் தனது திருவருள் நோக்கால் நசிக்கப் பண்ணுவன் என்பதொன்று. இக்கருத்து விபூதி தாரணத்தின் உட்கருத்தோடு இயை புடையதே.

(2) மற்றொரு சிறிய கருத்து மேற்சொன்ன ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் திருவாக்கொன்றால் இனிது விளங்குகின்றது.

"அரிய மனமும் அறிவரிதாய், அருவாய், நிறைவாயிருந்தும்,முன
அமரர் திரிபுரஞ்செய் குறை அறையக்கேட்டு முக்கண் வழிக் [ர்
கரியகளச் செம்புயல் கருணைபொழியப் பெருகுங் கடல் பிறந்து
கருதுமடியார் பவக்கடலைக் கடத்து மணியைத் துதித்திடுவாம்"*

என்பது அத்திருவாக்கு. இதனால், ஆண்டவன் மனதுக் கெட்டா மாண்பினனும், அருவனும் பூரணனுமானவனாயினும், திரிபுரங்கள் தமக்குச் செய்த இன்னலைப்பற்றி முறையிடத் தேவர்கள் தன்னை அடைந்தகாலத்து, அவர்கள்காண முக்கண்ணும் நீலகண்டமும் உடைய மூர்த்தியாய் விளங்கி நின்று, அவர் தம் குறைகேட்டவழி, பெரிதுமிரங்கி அருட்கண்ணீர் பொழிந்தான் என்று அறிகின்றோம். ஆகவே ஆண்டவன் பேரருளுடையான் என்னு முண்மை புலப்படுத்தப் பட்டதென்க. இறைவன் கண்களினின்று விழுந்த நீர்த்துளிகள் உருத்திராக்க மரங்களானது

*திருப்போரூர் சந்நிதிமுறை: காப்புப்பருவம்.

Koviloor Digital Library


"சகலருக்கும் அனுக்கிரகம் செய்வதற்காக" என்று உபநிடதங் கூறுவதும் இதனை வற்புறுத்தும்

இதனால், திருநீறணிதல் தூய்மை நாட்டத்திற் கறிகுறியாயவாறுபோல, உருத்திராக்கமணிதல் அருட்குண வளர்ச்சிக் கடையாளமாகும் என்று கொள்ளுதல் ஏற்புடைத்தாம். ஆறறிவுடைய மக்கள் பெருமுயற்சி செய்து அடைய வேண்டிய குணநலங்கள்யாவும் தூய்மை, அன்பு என்னும் இரண்டிலடங்கும். இவற்றைத் தமது வாழ்க்கைக் கப்பலை ஒட்டும் மாலுமிகளாகக் கொண்டு சம்சார சாகரத்தில் பயணஞ்செய்யும் சீவர்கள் முத்திக் கரையைத் திட்டமாயடைவார்; அவ்விருகுண பூரணனாகிய முதல்வனோடொன்றிப் பொன்றா இன்ப முறுவர்.

தம்மையும் தலைவனையும் மறந்துழலும் சீவர்கட்கு, உண்மைப் பொருளினியல்பையும், உயிரடைய வேண்டிய பேற்றின் தன்மையையும், அதற்குரிய சாதன இயல்பையும் எளிதில் அடிக்கடி நினைப்பூட்டத்தக்க சமயசின்னம் அத்தியாவசியமே. இதுகாறும் கூறியதிலிருந்து விபூதி உருத்திராக்கங்கள் அத்தகைய ஒப்புயர்வற்ற சின்னங்களாய் அமைந்துள்ளன என்று தெரியவரும். சமய அநுட்டானங்களும் அடையாளங்களும் எவ்வளவு உயரியனவாயிருப்பினும், கருத்தறியாது அநுட்டிக்கப்பட்டுவரின், நாளடைவில் மக்களை நல்வழிப்படுத்தும் ஆற்றலை இழந்து, நிலைமாறி, குருட்டு வழக்கமாக இழிந்து, பின்னர் மறைந்துபோமியல்பினவாம். பல காரணங்களால் இவ்வாறு இக் கருத்துமறதி மக்கள்பால் நிகழும்போதெல்லாம் ஆன்றோர் வெளிப்பட்டு உண்மையை நினைப்பூட்டி எம்

Koviloor Digital Library

மனோரை உய்விப்பர். விபூதி உருத்திராக்க தாரணத்தைக் கேவலம் ஒரு சமய சின்னமாகமட்டும் மதிக்க ஒருப்படுவோரும் அச்சின்னம் நினைப்பூட்டும் சீரிய குறிக்கோளைக் கருதி அத்தாரணத்தைக் கைவிடாது பொருளுணர்ந்து அநுட்டித்தல் கடமையாம். அடிக்கடி நமது குறிக்கோளுணர்த்தப்படுதலால் நமது கரணங்கள் நல்வழிச்செல்லல் அநுபவசித்தமே. இப்போது, 'சிவ சின்னம் அணிய வேண்டுவதேன்' என்னும் வினாவிற்கு, 'சிவன் சிவனாதற் பொருட்டே' என்று விடை கூறலாம்.

## III

இந்தக் கட்டுரையை இதனோடு முடித்து விடலாமாயினும், விபூதி உருத்திராக்க தாரணத்தோடு சார்த்திக் கைக்கொள்ளப்படும் பிறிதொரு சின்னத்தையும் சிறிது விளக்குதல் இழுக்காகாது. பலர் நெற்றியிலணியும் விபூதியின் மேல் சந்தனப் பொட்டொன்றிடுகின்றனர். இது வேதாகமாதிகளில் விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எவ்வாறோ உலக அநுஷ்டானத்தில்மட்டிருந்து வருகிறது. அதன் உண்மை வரலாற்றைக் கண்டு கூறும் பொறுப்பை மகிநுட்ப நூலோடுடைய பெரியார்பால் விடுத்து, இதை எழுதுவோரது சிற்றறிவிற்கெட்டும் இரண்டு ஊகங்களைமட்டும் இங்குக் குறிப்பிடலாகும்.

(i) தேவாதிதேவனாகிய சிவபெருமான் நெற்றியிற் கண்ணுடையான்; "நுதல்விழிநாட்டத் திறையோன்." அவனை வணங்குவோர், சாதனவிபூதியை அணிவது அவனது மேனியிற் பூத்த மஹாவிபூதியை நினைப்பூட்டுதல்

Koviloor Digital Library


போல, நெற்றியிற் பொட்டிடுதல் மலநாசம் பண்ணும் ஞானாக்கினி ரூபமாகிய நெற்றிக் கண்ணையுடையான் எம்பிறைவன் என்பதை நினைப்பூட்டுவதாகலாம்.

(ii) அன்றியும்,

"விந்துவு நாதமும் மேருவி லோங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்தமி லாத அறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடுந் தானே"

"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாயப் பரம னிருந்திடம்
சிற்றம்பல மென்று தேர்ந்துகொண் டேனே"

என்னும் திருமந்திரங்கள் உணர்த்துகின்றபடி, ஆஞ்ஞைத்தானமாகிய புருவமத்தியில் யோகியர்க்குத் தோன்றும் தாமரையிலே ஆன்மாவானது அறிவு மாத்திரையாய விந்து நாதங்களோடு கூடிச் சமாதியிற் பொருந்தி நின்று சிதம்பர நாதனைத் தரிசனஞ் செய்யும். இப்பெரிய யோகானுபவத்தைச் சுட்டுதற்காகவே புருவமத்தியிற் பொட்டிடும் வழக்கம் உண்டாயிருக்கலாம் என்னும் ஓர் ஊகம் தோன்றுகின்றது. நிற்க,

இந்நாட்டில், சுமங்கலிக்கு மஞ்சட் பூச்சும் மாங்கல்ய தாரணமும் இன்றியமையாத அடையாளங்களாதல் போல, வைதிக சமயிகட்கு விபூதிப் பூச்சும் உருத்திராக்க தாரணமும் விலக்கலாகாச் சின்னங்களாமென்று நமது முன்னோர் விதித்துள்ளார்கள். அறனறிந்து ஆன்ற அறிவுடையார் இன்னும் பலகாரணங்கள் காட்டக்கூடும். சோப்

Koviloor Digital Library

புப் பூச்சும் மோதிர தாரணமும் இந்து சுமங்கலிகட்குப் போதுமென்றெண்ணு நாகரிகமெழுமேலது கண்டிக்கத் தக்கதாமாறு போலவே, சமய சின்ன தாரணத்தின் கருத்தறியா மாந்தர் அதனைக் கழித்துப் பேசும் உரையும் கருணையாலும் நியாயத்தாலும் கடியத்தகுந்ததாம். இவ்வடையாளங்கள் இறைவன் நின்றதோர் நேர்மையினையும் அவனை ஆன்மா அடையு நெறியின் முக்கிய லக்ஷணத்தையும் புலப்படுத்துஞ் சிறப்பின என்று மேலே விரிவாக விளக்கப்பட்டது.

இத்தகைச் சிறப்புடைய சின்னங்களை அணிதற்குரிய சமயத்திற் பிறந்தோர் அனைவரும், அவற்றை அசட்டை செய்யாது கருத்துணர்ந்து அணிந்து உயர்கதியினை அடையக் கண்ணுதற் பெருமான் கருணை புரிவானாக.

"ஞாலநின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயி லுறையு மெம்மாதியே"

---

☞ இது பேளூர் சாந்தலிங்க சுவாமிகள் மடத்தைச் சார்ந்த ஸ்ரீ சத்வித்யா சன்மார்க்க சங்கத்தில் 1923-ம் வருடம் நிறைவேறிய ஆண்டு நிறைவு விழாவில் வாசித்தற்காக எழுதப் பெற்றது.

THE PROGRESSIVE PRINTERS, 17, CORAL MERCHANT ST., MADRAS.